# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை : திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண் 106 / 2015**

திரு. ஜெ. ராஜமோகன்,
மேலவீடு, பாளையஞ்சேர்ந்தங்குடி,
ஓரத்தூர், சிதம்பரம் வட்டம்,
கடலூர் மாவட்டம். ...... மேல் முறையீட்டாளர்
(திரு. ஜெ. ராஜமோகன்)

எதிர்

1) செயற் பொறியாளர்/சிதம்பரம்,
கடலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அனந்தீஸ்வரர் கோவில் தெரு,
சிதம்பரம்–608001.

2) உதவி செயற்பொறியாளர்/ஊரகம்/பண்ருட்டி,
கடலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பண்ருட்டி துணை மின் நிலைய வளாகம்,
பூங்குணம், பண்ருட்டி – 607 106. .......... எதிர் மனுதாரர்கள்
(திரு. எஸ். பாலசுப்பிரமணியன், செயற்பொறியாளர்/சிதம்பரம் &
திரு. ஆர். ராஜேந்திரன், உதவி செயற்பொறியாளர்/பண்ருட்டி–22.3.16 &
திரு. வி.கே. அசோக் பிரசன்னா, செயற்பொறியாளர்/சிதம்பரம்(பொறுப்பு)–18.5.16

**கேட்புரை நாள் – 22.3.2016 & 18.5.2016**

**ஆணை நாள் – 11 .7. 2016**

திரு.ஜெ. ராஜமோகன், மேலவீடு அவர்களின் 27.12.2015 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண். 106/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 22.3.2016 மற்றும் 18.5.2016 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள

வாதங்கள், எதிர்தரப்பினரின், பதிலுரையிலுள்ள வாதங்கள், மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

(i) மின் இணைப்பு எண். 376–ஐ மறு மின் இணைப்பு செய்ய வேண்டும்.

(ii) நிரந்தர மின்துண்டிப்பிற்கான மதிப்பீட்டு தொகையை இரத்து செய்ய வேண்டும்.

(iii) தகுந்த நஷ்ட ஈடும், அவருக்கு ரூ.50,000/– பிரிவில் உடனே விவசாயத்திற்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று உத்தரவு இட வேண்டும்.

**2. வழக்கின் சுருக்கம்:**

2.1 திரு. ஜெ. ராஜமோகன் அவர்கள் சர்வே எண். 92/2 ல் உள்ள கிணற்றுக்கு விவசாய மின் இணைப்பு வேண்டும் என்று விண்ணப்பம் அளித்துள்ளார். அந்த விண்ணப்பத்தின் பதிவு எண்.06 நாள் 7.4.2011 ஆகும். மேற்கண்ட விண்ணப்பத்திற்கு சுயநிதி திட்டத்தின் ரூ.50,000/– பிரிவின் கீழ் மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று 2.7.2011–ல் ரூ.500/– செலுத்தி பதிவு செய்துள்ளார்.

2.2 சர்வே எண். 92/2ல் ஏற்கனவே திருமதி. செல்லபாங்கி அவர்களின் பெயரில் விவசாய மின் இணைப்பு எண். 376, வழங்கப்பட்டு மின்கட்டணம் ரூ.1876/– செலுத்தப்படாமையால் 17.8.2000 இல் மின்துண்டிப்பு செய்யப்பட்டு மின் இணைப்பில் நிரந்தர துண்டிப்பிற்கான மதிப்பீடு தொகை மற்றும் நிலுவைத்தொகை ஆக மொத்தம் ரூ.40,021/– செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.3 மேல்முறையீட்டாளர் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு தன்னுடைய மனுவை 29.10.2015ல் சமர்பித்துள்ளார்.

2.4 மன்றம் தன்னுடைய தீர்வை 8.12.2015 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது.

**3. மன்றத்தின் ஆணை:**

கடலூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய 08.12.2015ல் ஆணையில் தீர்வை வழங்கியுள்ளது. அந்த ஆணையின் சம்பந்தபட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"தீர்ப்புரை:*

1. *விவசாய மின் இணைப்பு எண்.**376** யை மறு மின் இணைப்பு கோரி மின் இணைப்பின் உரிமம்தாரர் பெயரில் அளிக்கப்பட்டுள்ள கடிதம் மற்றும் அக்கடிதத்திற்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்ட உதவி பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் அவர்களின் கடிதத்தில் இம்மின் இணைப்பு **17.08.2000**–ல் மின் துண்டிப்பு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.*

   *தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதி தொகுப்பு விதி **22**ல் **(6)(1)**–ன்படி விவசாய மின் இணைப்புகள் மின் துண்டிப்பு செய்யப்பட்ட தேதியிலிருந்து **5** ஆண்டுகளுக்குள் மட்டுமே மறு மின் இணைப்பு செய்ய இயலும். மனுதாரர் மறு மின் இணைப்பு கோரும் விவசாய மின் இணைப்பு எண்.**376**, **17.08.2000**–ல் மின் துண்டிப்பு செய்யப்பட்டதாக ஆவணங்கள் அடிப்படையிலேயே உறுதி செய்யப்படுவதால், தற்போது **5** ஆண்டுகள் கடந்த நிலையில் உள்ளதால் அம்மின் இணைப்பை மறு மின் இணைப்பு செய்ய உத்திரவிட இயலாது.*

2. *தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதி தொகுப்பு, விதி 17–ல் 9(a) ல் In case of service connections in a premises, which have been disconnected / dismantled for defaults in payment of dues whatsoever and if such service connections are to be reconnected or new service connections are to be obtained by other persons in such premises either by purchase or transfer or lease basis, the Distribution Licensee shall reconnect such service connections or effect new service connections, as the case may be, in such premises only after payment of dues attributed to such premises by the applicant என குறிப்பிட்டுள்ளவாறு,*

   *புதிய மின் இணைப்பு கோருபவர் அவ்விடத்தில் ஏற்கனவே இருந்த பழைய மின் இணைப்பின் நிலுவைத் தொகையை செலுத்திய பிறகே புதிய விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்க இயலும் என்ற விதி தொகுப்பினை மன்றம் உறுதி செய்து, உரிமம்தாரர் தெரிவிக்கும் நிலுவை தொகையினை மனுதாரர் செலுத்த இம்மன்றம் உத்திரவிடுகிறது.*

3. *மனுதாரர் சுயநிதி திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு அளிக்கப்பட்ட அறிவிப்பு கடிதத்தின் கால கெடுவிற்குள் தயார் நிலை பதிவு செய்யப்படாததால், சுயநிதி திட்ட முன்னுரிமையில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பம் அப்பிரிவிலிருந்து இரத்து செய்யப்பட்டாலும் சாதாரண முன்னுரிமை வரிசையில் பதிவின் அடிப்படையில் நிலுவையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*மனுதாரர், நிலுவை தொகை செலுத்திய பிறகு சாதாரண வரிசையில் உள்ள விண்ணப்பத்திற்கு மனுதாரரின் விருப்பத்திற்கு இணங்க அவர் விரும்பும் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்கிட மன்றம் உத்திரவிடுகிறது.''*

4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>

4.1 விவசாய நிலஅளவை எண் 92/2ற்கு மின் இணைப்பு வேண்டி 2.07.2011 அன்று விண்ணப்பத்துடன் உரிய ஆவணங்களை இணைத்து செயற்பொறியாளர் இப / சிதம்பரம் அவர்களிடம் அளித்துள்ளார். அன்றே ரூ.50,000/— திட்டத்தில் விவசாய மின் இணைப்பு பெற விருப்பம் தெரிவித்துள்ளார். அதற்கு ரூ.500/— பணம் செலுத்தி உரிய கள ஆய்விற்கு பிறகு தயார் நிலை பதிவு செய்ய 29/6/2012 அன்று செயற்பொறியாளர் இப / சிதம்பரம் அவர்களின் அறிவிப்பு கடிதம் கிடைத்தது.

4.2 அதனை எடுத்துக் கொண்டு AE / இப / கீரப்பாளையம் அவர்களிடம் காட்டினார். மோட்டார் வாங்கி அதனுடைய ரசீதை எடுத்துக் கொண்டு அதனுடன் ரூ.50,000/— எடுத்து வாருங்கள் என்றார். அவ்வண்ணமே மோட்டார் வாங்கிய ரசீதை காட்டினார்.

4.3 உடனே AE ராஜேந்திரன் பணம் ரூ.20,000/— கேட்டார். எதற்கு என்று கேட்டார். 92/2 ல் ஏற்கனவே அவரது தாயாரின் அம்மா பாட்டி செல்லபாங்கி பெயரில் விவசாய மின் இணைப்பு எண்.376 பெறப்பட்டு 8/2000, மற்றும் 2/2001/ ஆகிய காலங்களுக்கு மின் இணைப்பு நிலுவைத்தொகை செலுத்தாததால் 17/8/2000 ல் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது என்று கூறினார்.

4.4 சேரலாதன் என்ற மதிப்பீட்டாளரை கூப்பிட்டு செல்லபாங்கி விவசாய மின் இணைப்பை நிரந்தர மின் துண்டிப்பு செய்வதற்கு மதிப்பீடு பட்டியலை உடனே தயார் செய்து எடுத்து வாருங்கள் என்றார். உடனே அவர் என்னிடம் ரூ.40,021/— கட்ட வேண்டும் என்று வாய்மொழியில் கூறிவிட்டு 5 நிமிடம் இருங்கள் கடிதம் தருகிறேன் என்றார்.

4.5 அவரின் ஊருக்கு வந்து அவரின் பண்ணை ஆளிடம் கடிதத்தை அன்றைய தினமே கொடுத்து விட்டு சென்று விட்டனர்.

4.6 120 நாட்கள் முடிந்து விட்டது மதிப்பீட்டு தொகையை கட்டி விட்டு பிறகு புதியதாக விண்ணப்ப படிவத்தை கொடுக்கவும் என்று கடிதம் 5/6/13 வந்தது.

4.7 இதனை எல்லாம் குறைதீர்க்கும் மன்றத்தில் கூறினார். அவர்கள் மதிப்பீட்டு தொகையை ஏன் கட்ட வில்லை என்றனர் ஏற்கனவே A.E. ராஜேந்திரன் மரம் கம்பி அனைத்தையும் 2007 to 2010ல் எடுத்து விட்டார். இல்லாத கம்பத்திற்கும் இல்லாத கம்பியிற்கும் அவர் ஏன் பணம் கட்ட வேண்டும் என்று கேட்டார்.

4.8 8/12/2015 தேதியிட்ட மாவட்ட மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் இருந்து கடிதம் வந்தது அதில் நிலுவைத்தொகை செலுத்தி மனுதாரரின் விருப்பத்திற்கு அவர் விரும்பும் திட்டத்தின் கீழ்

மின் இணைப்பு வழங்கிட மன்றம் உத்தரவு பிறப்பித்து இருந்தது அந்த கடிதத்தை எடுத்துக்கொண்டு E.E/இப/சிதம்பரம் அவர்களிடம் காண்பித்தார் அவர் நிலுவை தொகை கட்டி விடுங்கள், என்றார் மேலும் 50,000 திட்டத்தில் சேர்வதற்கான விருப்ப மனுவை கொடுத்தார். அதற்கு உரிய 500 ரூபாய் கட்டிய ரசீதையும் நிலுவை தொகைக் கட்டிய ரசீதையும் இதனுடன் இணைத்து உள்ளார்.

4.9 மதிப்பீட்டு தொகை கட்ட வேண்டியது இல்லை என்று தீர்ப்பு வந்துள்ளது. இந்த மதிப்பிட்டு தொகையை காட்டியே அவர் மின் இணைப்பை நிறுத்தினார்கள். 2012 ல் அவருக்கு மின் இணைப்பு வந்து இருந்தால் வருடத்திற்கு அவருக்கு 2 லட்சம் கிடைத்து இருக்கும் 4 ஆண்டில் 8 லட்சம் இழப்பு அவருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும் மோட்டார் வாங்குவதற்கு வட்டிக்கு பணம் வாங்கி வாங்கினார் இந்த இழப்பை யாரிடம் எப்படி சரிசெய்வது.

4.10 மாவட்ட மின் நுகர்வோர் குறைதீர்ப்பு மையம் தன்னுடைய உத்தரவில் மின்சார ஒழுங்குமுறை சட்டம் விதி 22 (6) (1) மற்றும் 17 (9) (a) இரண்டும் அவரால் மீறப்பட்டதாக குறிப்பிட்டு உள்ளார்கள்.

4.11 மேலும் எதிர்வாதிகள் (TNEB) மேல்முறையீட்டாளருக்கு தேவையான அவகாசம் கொடுக்கப்பட்டும், எந்த விதமான ஆவணங்களையும் கொடுக்க தவறிவிட்டனர்.

4.12 மேல்முறையீட்டாளர், தன்னுடைய 15.2.2016 நாளிட்ட மனுவில் கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்.

(i) அவர் 8/2000த்தில் துண்டிக்கப்பட்ட எண்.376ஐ மறு விவசாய மின் இணைப்பை கேட்கவில்லை. 376 விவசாய மின் இணைப்புக்கு போடப்பட்ட மரம் மற்றும் கம்பி தளவாட சாமான்களை A.D.E இராஜேந்திரன் 2006–2007ல் எடுத்து சென்றுவிட்டார்.

(ii) 7.4.2011ல் D.E, A.D.E இவர்களால் நிறுத்தப்பட்ட 50,000 சுயநிதி திட்டத்தில் விவசாய மின் இணைப்பை திரும் பபெறுவதற்காகத்தான் மேல்முறையீடு கோரியுள்ளார்.

(iii) கடலூர் மாவட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் தெளிவாக கூறினார். மன்றத்தில் D.Eக்கும், A.D.E க்கும் போதுமான அவகாசம் கொடுக்கப்பட்டும் இவர்களால் பதில் அறிக்கை கொடுக்கவில்லை இருவர் மீதும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவருக்கு நிலுவை தொகை கட்டினால் போதும் என்றும் தீர்ப்பு வந்தது நகலை தங்களுக்கு அனுப்பி வைத்தார். நிலுவை தொகையை கட்டிவிட்டார்.

(iv) மதிப்பீட்டு தொகையை காட்டி 2012ல் 50,000 சுயநிதி திட்டத்தில் அவருக்கு வந்த விவசாய மின்இணைப்பை நிறுத்திவிட்டனர். மதிப்பீட்டு தொகை கட்ட வேண்டாம் என்று தீர்ப்பு வந்ததால் அவருக்கு 2012ல் நிறுத்தப்பட்ட அவர் விவசாய இணைப்பை கொடுக்குமாறு கேட்டார்.

(v) கடந்த 5 ஆண்டுகளாக மின் வாரியத்தால் பல இன்னல்களை சந்தித்தும் விவசாயம் முழுவதுமாக பாதிக்கப்பட்டும் இருந்த சூழ்நிலையில் நாளை அவருக்கு மின்சாரம் கொடுப்பதாக

இருந்ததால் அவர் மேல் முறையீடு செல்லவில்லை என்று எழுதி கொடுக்கிறேன் என்று கூறினார். அதற்கு D.E அவர்கள் நாளை காலை உங்கள் வயலில் மரமும், மின்கம்பியையும் A.D.E, A.E ஆகியோர் கொண்டு வந்து மின் இணைப்பை கொடுப்பார்கள் என்று கூறினார். அவரும் ஏற்றுக் கொண்டார்.

(vi) அதன் அடிப்படையில் ஒப்புதல் வாக்குமூலம் எழுதும்போது சமரபேச்சு வார்த்தையில் உடனடியாக விவசாய மின்இணைப்பு 92/2ல் வழங்க ஒப்புக் கொண்டதால் மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொள்கிறார் என்று எழுதி அவரிடம் கையெழுத்து பெற்றார்கள் அதில் D.E சிதரம்பரம், A.D.E முட்லூர், A.D.E பண்ருட்டி ஆகியோர் கையெழுத்து போட்டனர். முட்லூர் A.D.E அவர்கள் AE கீரப்பாளையம் அவர்களிடம் கையொப்பம் பெறவேண்டும். ஆகையால் இன்று இரவு கையெழுத்து வாங்கி நாளை அவரிடம் நகல் கொடுப்பதாக கூறினார். அதையேற்றுகொண்டு சென்று விட்டார்.

(vii) மறுநாள் கீரப்பாளையம் அலுவலகத்திற்கு சென்று நகலை கேட்டார். சேரலாதன் என்பவர் கொடுத்தார். அதனை பெற்று படித்த போது தான் அதில் உடனடியாக மின்சாரம் கொடுக்கப்படும் என்ற இடத்தில் இட செறுகலாக விதியின்படி என்ற வார்த்தையை சேர்த்து உள்ளார்கள்.

(viii) D.E தான் காலையில் அவரின் வயலுக்கு மின்சாரம் கொடுப்பதாக சொன்னார் இதுமாதிரி எழுதினால்தான் இந்த file முடிவுக்கு வரும் கவலை வேண்டாம் என்றார் உடனே D.Eக்கும் அவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. உடனே அவர் எழுதி கொடுத்த வாக்குமூல கடிதத்தை கொடுங்கள் அதனை கிழித்து விட்டு மேல்முறையீடு செல்வதாக எழுதி தருகிறேன் என்று கூறினார். அதன்படி புதிய ஒப்புதல் வாக்குமூலம் எழுதி கையெழுத்து போட்டு கொடுத்தார். அனைத்து நகல்களும் இதனுடன் இணைத்து உள்ளார்.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:</u>

5.1 கீரப்பாளையம் பிரிவிற்கு உட்பட்ட, பாளையஞ்சேர்ந்தங்குடி கிராமத்தில், புல எண்.92–2 யில், திருமதி.செல்லப்பாங்கி, பெயரில், சுயநிதிதிட்டத்தின் கீழ், விவசாய மின் இணைப்பு எண் 376, ஓரத்தூர் பகிர்மானம், இயங்கிவந்தது. பின்பு கடந்த 08–2000 காலத்திற்கு உண்டான, மின் கட்டணம் செலுத்தாத காரணத்தால், மேற்கண்ட விவசாய மின் இணைப்பு, கடந்த 17.08.2000 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டது.

5.2 பின்பு கடந்த 24.11.2010 அன்று, திருமதி.செல்லப்பாங்கி அவர்கள், மேற்கண்ட விவசாய மின் இணைப்பு எண் 376–யை, மறு மின் இணைப்பு வழங்குமாறு, பிரிவு அலுவலர், கீரப்பாளையம் அவர்களிடம் மனு அளித்துள்ளார்கள். மேற்கண்ட மின் துண்டிப்பு செய்து, ஐந்து வருடங்களுக்கு மேல், ஆகிவிட்டதால், விதிகளின் படி மறு மின் இணைப்பு வழங்க இயலவில்லை.

5.3 பின்பு பாளையஞ்சேர்ந்தங்குடி கிராமம் புல எண். 92–2 ற்கு, புதிய விவசாய மின் இணைப்பு வேண்டி திருமதி. செல்லபாங்கியின் பேரன் திரு.ஜெ.ராஜமோகன், அவர்கள் விண்ணப்பம் அளித்து பதிவு செய்துள்ளார்கள். அதன் விவசாய விண்ணப்ப எண் 06 நாள் 07.04.2011 ஆகும். அவ்விண்ணப்பத்திற்கு, சுயநிதி ரூ.50,000/– திட்டத்தின் கீழ், மின் இணைப்பு பெற விருப்பம் தெரிவித்து, ரூ.500/– முன் பணம் செலுத்தியுள்ளார்கள். அதன் அடிப்படையில், உரிய மதிப்பீடு தயார் செய்து மின் இணைப்பு பெற்றுக்கொள்ள பணம் ரூ.50,000/– செலுத்த அறிவிப்பு கடிதம், வழங்கப்பட்டது. இருப்பினும், மேற்கண்ட அதே புல எண்ணில், மின் துண்டிப்பு செய்யப்பட்ட மின் இணைப்பு எண். 376–யின், தளவாட பொருட்களை அகற்றுவதற்கும் மற்றும் மின் கட்டண நிலுவை தொகையை செலுத்திடவும் ரூ.40,021/– செலுத்திட அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது. ஆனால், மனுதாரர், மேற்கண்ட சுயநிதி திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற்றுக்கொள்ள ரூ.50,000/– த்தை உரிய காலத்தில் செலுத்தவில்லை. மேலும், பணம் செலுத்திட கால நீட்டிப்பும் கோரவில்லை. மேலும், மின் துண்டிப்பு செய்யப்பட்ட மின் இணைப்பு எண். 376–க்கும் நிலுவை தொகையையும் செலுத்தவில்லை. மேலும் நிலுவை தொகையை செலுத்துவதற்கும், தவணை ஏதும்கோரப்படவில்லை. எனவே, திரு.ஜெ.ராஜமோகன் அவர்கள் சுயநிதி திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற்றுக்கொள்ளாததால், மேற்கண்ட விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் சாதாரண முன்னுரிமையில் வைக்கப்பட்டது.

5.4 மேலும் திரு.ஜெ.ராஜமோகன் அவர்கள் புதிய மின் இணைப்பு பாளையஞ்சேர்ந்தங்குடி கிராமம், புல எண் 92–2 யில் பெற தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை அவர்களிடம் 23.01.2013 மனு அளித்துள்ளார்கள். அம்மனுவிற்கு, புதிய மின் இணைப்பு சுயநிதி திட்டத்தின் ரூ.50000/– செலுத்துவதற்கான அதிகபடியான காலகெடு 60 நாட்கள் முடிந்து விட்டதாலும் மேற்கண்ட புல எண்ணில் மின் துண்டிப்பு செய்யப்பட்ட நிலையில் இருந்த விவசாய மின் இணைப்பு எண் 376–க்கு உண்டான நிலுவை தொகையை ரூ.40021/– செலுத்தி விட்டு மீண்டும் சுயநிதி திட்டம் ரூ.50000 திட்டத்தில் ரூ.500 முன் பணம் செலுத்தி வாரிய ஒதுக்கீடு புதிய மின் இணைப்பு வழங்கப்படும் என்று பதில் அளிக்கப்பட்டது.

5.5 மேலும் திரு.ஜெ.ராஜமோகன், அவர்கள் புதிய மின் இணைப்பு வழங்க கோரி, தலைவர் மாவட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் அவர்களிடம் மனு அளித்துள்ளார். அம்மனு மீது விசாரணை மேற்கொண்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. அத்தீர்ப்பில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதி தொகுப்பு விதி 17–யில் 9(a) யின் படி, புதிய மின் இணைப்பு கோருபவர் அவ்விடத்தில் ஏற்கனவே இருந்த பழைய மின் இணைப்பின், நிலுவை தொகையை செலுத்திய பிறகே, புதிய விண்ணபத்தின் மீது நடவடிக்கை எடுக்க இயலும் என்ற விதி தொகுப்பிணை மன்றம் உறுதி செய்து, உரிமதாரர் தெரிவிக்கும் நிலுவை தொகையை மனுதாரர் செலுத்த மாவட்ட குறைதீர்ப்பு மன்றத்தில், தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த தீர்ப்பின் படி திரு. ஜெ.ராஜமோகன் அவர்கள்

மின் துண்டிப்பு செய்யப்பட்ட விவசாய மின் இணைப்பு எண்.376–க்கு உண்டான நிலுவை தொகையில் பகுதி ரூ.1876–யை மட்டும் கடந்த 16.12.2015 அன்று செலுத்தியுள்ளார்கள். மேலும் திரு.ஜெ.ராஜமோகன் அவர்கள் விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் எண். 06 நாள் 07.04.2011 க்கு மீண்டும் சுயநிதி திட்டத்தின் கீழ் புதிய மின் இணைப்புக்கு அதே புல எண்ணில் பெற்றுக்கொள்ள இரண்டாவது முறையாக விருப்பம் தெரிவித்து முன் பணம் ரூ.500/– 16.12.2015 அன்று செலுத்தியுள்ளார்கள்.

6.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

6.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும், தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 22.3.2016 மற்றும் 18.5.2016 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திரு.J.ராஜமோகன் அவர்கள் இரு நாட்களிலும் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் S.பாலசுப்பிரமணியம், செயற்பொறியாளர்/சிதம்பரம் மற்றும் திரு. ஆர். ராஜேந்திரன், உதவி செயற்பொறியாளர்/ஊரகம்/பண்ரூட்டி அவர்களும் 22.3.2016 அன்று கலந்து கொண்டு தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

6.4 திரு V.K. அசோக் பிரசன்னா, செயற்பொறியாளர் (பொறுப்பு) சிதம்பரம் அவர்கள் 18.5.2016 ல் நடந்த கேட்புரையில் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

7.0 <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாட்களில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>

7.1 மேல்முறையீட்டாளர் திரு.J.ராஜமோகன் அவர்கள் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார். மேலும் மின் இணைப்பு எண். 376 ல் மறு மின் இணைப்பு வேண்டும் என்று கோரவில்லை என்றும் தெரிவித்தார்.

7.2 விவசாய மின் இணைப்புகள் மின்கட்டணம் செலுத்தாமல், மின்துண்டிப்பிலிருந்து நிரந்தரமாக மின்பாதை நீக்கப்பட்டால் அதற்கான மதிப்பீட்டு தொகையை நுகர்வோரிடம் பெறவேண்டும் என்பது மின்வாரியத்தில் இதுவரை கடைப்பிடிக்கப்படவில்லை. ஆனால் வேண்டும் என்றே அவருக்கு மின் இணைப்பு வழங்க கூடாது என்பதற்காக தயாரிக்கப்பட்டதுதான் மேற்கண்ட மதிப்பீடு என்று வாதுரை புரிந்தார்.

7.3 இல்லாத மின் கம்பிகளுக்கும், மின்கம்பத்திற்கும் மின்துண்டிப்பு செய்து 12 ஆண்டுகள் கழிந்த பின்பு மதிப்பீடு தயார் செய்து, அந்த தொகையை செலுத்த வேண்டும் என்று கோருவது தவறு என்று வாதாடினார்.

7.4 அவர் 8/2000 ல் துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை மீண்டும் வழங்க வேண்டும் என்று கோரவில்லை என்றும் ஆனால் மேற்கண்ட மின் இணைப்பை நிரந்தரமாக அகற்றுவதற்கு (Permanent dismantling) ஆகும் மதிப்பீடு தொகையை செலுத்த கோருவது தவறு என்றும் வாதிட்டார். மேலும் அத்தொகையை செலுத்தவில்லை என்பதால் ரூ.50000/– சுயநிதி திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின் தொகை செலுத்துவதற்கு அவர் தயாராக இருந்தும் அத்தொகை பெற மறுக்கப்பட்டது என்றும் வாதிட்டார். அத்தொகை பெற மறுக்கப்பட்டதால் தான், மேற்கண்ட விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எனவே, தனக்கு அந்த முன்னுரிமை (Priority) வழங்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

7.5 மேலும், மின் இணைப்பு எண்.376 ஐ Permanent dismantling செய்வதற்கான மதிப்பீடு தொகை அவரிடம் கேட்பது தவறு என்று தீர்வு செய்யும் நிலையில் அல்லது. அந்த மதிப்பீடு தவறாக செய்யப்பட்டுள்ளது என்று தீர்வு செய்யும் நிலையில் அவருக்கு ஏற்கனவே ரூ.50000/– சுயநிதி திட்டத்தில் அவர் பதிவு செய்துள்ள முன்னுரிமையில், அவருக்கு விவசாய மின் இணைப்பை இயற்கை நீதி முறையில் (Natural justice) வழங்க வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

7.6 மேலும், மன்றத்தின் தீர்வின்படி, அவர்செலுத்த வேண்டிய மின்கட்டண நிலுவை தொகையை செலுத்திவிட்டதாகவும் Permanent dismantling charges கட்ட வேண்டும் என்று மன்றத்தின் தீர்வில் தெரிவிக்கப்படவில்லை என்றும் வாதிட்டார்.

## 8.0 <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>

8.1 எதிர்மனுதாரர் செயற்பொறியாளர் சிதம்பரம் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 மன்றத்தின் தீர்வில் நிலுவை தொகை கட்டப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலுவைத்தொகை மின்கட்டணம் மற்றும் dismantling மதிப்பீடு தொகையும் சேர்ந்தது தான் என்று வாதிட்டார்.

8.3 மின்வழங்கல் விதித் தொகுப்பின் விதி 17 9(a) ன் படி ஒரு புதிய மின் இணைப்பை ஒருவளாகத்திற்கு வழங்க வேண்டும் எனில் அந்த வளாகத்தில் ஏற்கனவே இருந்த மின் இணைப்பின் நிலுவை தொகையை செலுத்த வேண்டும். எனவே தான் மின் கட்டணத் தொகை மற்றும் dismantling மதிப்பீட்டு தொகையை சேர்த்து செலுத்தினால் தான் சுயநிதி திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது என்று வாதிட்டார்.

8.4 மேல்முறையீட்டாளர் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தில் தொகையை செலுத்தவில்லை என்பதால் அவரின் சுயநிதி திட்டத்தின் கீழ் பதிவு செய்த விண்ணப்பத்தின் முன்னுரிமை ரத்து செய்யப்பட்டுவிட்டது என்று வாதிட்டார்.

8.5 மேலும் தன்னுடைய 29.3.2016 மனுவுடன் கீழ்கண்ட ஆவணங்களை சமர்பித்துள்ளார்.

(i) ஒப்பந்த முறிவிற்கான அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்பதற்கு ஆதாரமாக T.A notice பதிவேட்டின் சம்பந்தப்பட்ட பக்கத்தின் நகல்.

(ii) மின் பாதையை அகற்றுவதற்கான செலவு தொகையை விவசாய மின் இணைப்புகளில் வசூல் செய்ய வேண்டும் என்ற உத்தரவு Circular Memo No. SE/EMC/EE3/ AEE2/ AE/VIII 48/D 159/96 (Tech Branch) dt. 22.4.96 ன் நகல்

(iii) விவசாய மின் இணைப்பு எண். 376 ல் மின் கம்பங்களையும், மின் கம்பிகளையும் அகற்றுவதற்கான மதிப்பீட்டின் நகல்.

8.6 29.3.2016 நாளிட்ட மனுவில் கீழ்கண்ட வாதங்களையும் தெரிவித்துள்ளார்.

(i) மேலும் நிரந்தரமாக துண்டிக்கப்பட்ட மின் இணைப்பின் மின் கட்டண பாக்கித் தொகை ரூ.1876/– தான் நுகர்வோரால் 16.12.2015 ல் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் BPSC ரூ.4113/– செலுத்த வேண்டியது உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

(ii) மேலும் மேற்கண்ட மின்பாதை பிரிக்கப்பட்டு அவைகள் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

8.7 18.5.2016ல் கேட்புரையில் கலந்து கொண்ட திரு V.K. அசோக் பிரசன்னா அவர்கள் dismantling மதிப்பீட்டை வாரிய விதிகளின்படி ஆராய்ந்து தன்னுடைய பதிலுரையை அனுப்புவதாக கூறினார். அவ்வாறு அனுப்பிய பதிலுரையில் CFC/Gen/FC/DFC/AAO/Rev/D /08 dt.30.8.2008 மற்றும் Memo No. SE/EMC/ EE3/AEE2/AE/VII8 48/D 155196 (Tech Branch) dt. 22.4.96 ன் படியும் தற்பொழுது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்து மதிப்பீட்டு தொகை 10,970/– என்று தன்னுடைய 23.5.2016 கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

8.8 மேலும் தன்னுடைய 23.5.2016 கடிதத்தில் திரு.J.ராஜமோகன் அவர்களின் சுயநிதி திட்டத்திற்கான மதிப்பீட்டு தொகை ரூ.50,000/– செலுத்த 30 நாள் அறிவிப்பு கடிதம் 29.6.2012 ல் அனுப்பப்பட்டது என்றும் ஆனால் மேல்முறையீட்டாளர் 30 நாட்களுக்கும் பணம் செலுத்தவில்லை என்றும் மேலும் கால அவகாசமும் கோரவில்லை என்பதால் அந்த விண்ணப்பம் சுயநிதி திட்டத்தில் தள்ளுபடி செய்யப்பட்டு அவருடைய விவசாய விண்ணப்பம் சாதாரண வரிசையில் வைக்கப்பட்டுவிட்டது என்றும் எனவே, dismantling மதிப்பீட்டு தொகை மாறினாலும் அவருடைய பழைய முன்னுரிமையை கொடுக்க முடியாது என்றும் வாதிட்டுள்ளார்.

8.9 மேலும் மேல்முறையீட்டாளர் தன்னுடைய விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்திற்கு ரூ.500/– செலுத்தி 16.12.2015 ல் ரூ.50,000/– சுயநிதி திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற பதிவு செய்துள்ளார் என்ற தகவலையும் தெரிவித்துள்ளார்.

## 9.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>

9.1 இருதரப்பினரின் வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழுவினாக்களாக தெரிகின்றன.

(i) ஒரு விவசாய மின் இணைப்பு, மின் கட்டணம் செலுத்தாமையால் மின்துண்டிப்பு செய்யப்பட்டு அதன் காரணமாக ஒப்பந்த முடிவு ஏற்பட்டால் மின் இணைப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட மின் பாதையை அகற்ற ஆகும் செலவு தொகையை யார் ஏற்க வேண்டும் ?

(ii) ஒரு புதிய விவசாய மின் இணைப்பு வழங்கும் பொழுது அந்த நிலத்தில் ஏற்கனவே உள்ள மின் இணைப்பின் நிலுவைத் தொகையை செலுத்திய பின்னர் தான் புதிய மின் இணைப்பு வழங்க முடியும் என்ற வாதம் ஏற்புடையதா ?

(iii) இந்த மேல்முறையீட்டாளரின் கோரிக்கையின் விவசாய மின் இணைப்பை 2.7.2011ல் பதிவு செய்யப்பட்டுள்ள சுய மின் நிதி திட்டத்தின் முன்னுரிமையில் வழங்க வேண்டும் என்பது ஏற்புடையதா ?

## 10. <u>வழக்கெழுவினா ஒன்றிற்கான தீர்வு:</u>

10.1 மேல்முறையீட்டாளர் விவசாய மின் இணைப்பு மின்துண்டிப்பிலிருந்து நிரந்தரமாக துண்டிக்கப்படும் பொழுது (Permanent dismantling) மின்பாதையை அகற்றுவதற்கான மதிப்பீட்டு தொகையை மின் நுகர்வோர் செலுத்த வேண்டும் என்ற விதி இதுவரை மின்வாரியத்தில் கடைபிடிக்கப்படவில்லை. ஆனால், அவருக்கு மின் இணைப்பை வழங்க கூடாது என்பதற்காக எதிர்மனுதாரரால் மேற்கண்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது என்று வாதிட்டுள்ளார்.

10.2 மேலும் மின்துண்டிப்பு செய்து 12 ஆண்டுகள் கடந்த பின்பு அதற்கு மதிப்பீடு செய்து அந்த தொகையை கோருவது தவறு என்றும் வாதிட்டார்.

10.3 மேலும் மின்கம்பம், கம்பி ஆகியவை 2007 to 2010ல் திரு ரஜேந்திரன் உதவி பொறியாளர் அகற்றிய பின்பு இல்லாத மின்கம்பம் மற்றும் மின்கம்பிகளை அகற்றுவதற்கு அவர் ஏன் பணம் செலுத்த வேண்டும் என்றும் கேள்வி எழுப்பினார்.

10.4 எதிர்மனுதாரர் Memo No.SE/SMC/EE3/AEE2/AE/VIII 48/D 159/96 (Tech Branch) 22.4.96 என்ற குறிப்பிணையை சுட்டிக்காட்டி விவசாய மின் இணைப்பை நிரந்தரமாக துண்டிக்க ஆகும்

மதிப்பீட்டு தொகையை நுகர்வோர்தான் செலுத்த வேண்டும் என்று வாதிட்டார். மேலும், மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட நாள் 17.8.2000 என்றும் தெரிவித்துள்ளார்.

10.5 மேலும், அந்த மின்கம்பங்களும், மின் கம்பிகளும், திருடுபோகாமல் இருக்கவும், மின் திருட்டு நடக்கமாலிருக்கவும் அகற்றப்பட்டு தளவாட சாமன்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

10.6 இங்கு, எதிர்மனுதாரர், Memo No.SE/EMC/EE3/AEE2/AE/VIII 48/D 159/96 (Tech Branch) 22.4.96 ஐ சுட்டிகாட்டி மேற்கண்ட உத்தரவின்படி விவசாய மின் இணைப்பை மின்கட்டணம் செலுத்தாமையின் நிரந்தர துண்டிப்பு செய்ய வேண்டும் எனில் மின்பாதையை நீக்கும் மதிப்பீட்டு தொகையை செலுத்த வேண்டும் என்று வாதிட்டுள்ளதால் அந்த ஆணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*" <u>Circular Memo No.SE/IEMC/EE3/AEE2/AE/VIII48/D.159/96 (Tech. Branch) 22-4-96</u>*

*Sub : Elecy – Dismantling of agricultural services not in use/not required by the consumers- expenditure to be borne by the Board or not – Reg.*

*Ref : Lr.No.SE/DAEDC/DGL/AEE/GI/AE1/TA3/F.Doc/D.1035/96 dt.28-3-96.*

****

*In the letter dated 28.,3.96, the Superintending Engineer, Dindigul –Anna Elecy. Distn. Circle has requested certain clarifications on the dismantling of agricultural services not in use/not required bythe consumers, a copy of which is enclosed.*

*For the above reference, the following clarifications are issued.*

*The dismantling charges has to be collected from the consumer in respect of the following cases.*

1. *If the disconnection is due to non payment of CC charges and subsequent termination of the agreement by the Boarrd.*
2. *If the disconnection is due to the request of the consumer and subsequent termination of the agreement based on the request of the consumer.*
3. *If the consumer wants permanent dismantling of the service only to facilitate the Electricity Board to give supply for industrial purposes using the existing lines.*

*However, in the case of agricultural services without operational use for want of water or for other reasons and where there is no revenue to the board by continuing the service and the lines can be better utilized elsewhere if they are dismantled then in such cases the dismantling of the lines and services may be carried out at Board's cost provided the consumer is willing to give consent for permanent dismantling.*

*A. Chinthamani,*
*Member(Distribution)"*

10.7 மேற்கண்ட ஆணையை கூர்ந்து படிக்கும் பொழுது ஒரு விவசாய மின் இணைப்பு மின் கட்டணம் செலுத்தாமையில் மின் துண்டிப்பிலிருந்து அந்த ஒப்பந்தம் வாரியத்தால் முறிவு செய்யப்பட்டால் மின் பாதையை அகற்றும் செலவு நுகர் வோரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும் என்று தெரிகிறது.

10.8 மேலும் இதுசம்பந்தமாக நான் மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 33(5) மற்றும் மின்வழங்கல் விதித் தொகுப்பின் விதி 17(1) & 17(2) ஆகியவற்றை ஆராய விரும்புகிறேன். அந்த விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“ 33. AGREEMENTS:*

*xxx xxx xxx*

*xxxx xxx xxx*

*(5) In the case of termination of the agreement either by the consumer under sub – regulation (3) or by the licensee under sub – regulation (4), as the case may be, the licensee shall recover the dues if any due from the consumer after making such adjustment of the dues, due to him by the consumer as may be necessary to clear the dues from the consumer against the security deposit or additional security deposit or any other deposit made by the consumer and after making such adjustment, refund the balance deposit, if any, to the consumer within three months from the date of termination of the agreement.”*

***17. AGREEMENT WITH RESPECT TO SUPPLY: ISSUES ON RECOVERY OF CHARGES***

*(1) Every consumer shall pay to the Licensee, from the date of commencement of supply till the agreement is terminated, security deposit, minimum monthly charges, fixed charges, if any, and other charges as provided in the Tariff Orders, this Code and any other orders in this regard by the Commission, from time to time. However, any consumer, who has not availed of reconnection even after the expiry of termination of agreement period, the monthly minimum charge shall be payable upto the date of termination of such agreement.*

*(2) Notwithstanding the termination of the agreement, the consumer shall be liable to pay the arrears of current consumption charges or any other sum due to the Licensee on the date of disconnection and meter rent, if any, up to the date of termination of the agreement and Belated Payment Surcharge (BPSC) up to the date of payment.”*

10.9 மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 33 (5) கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது ஒரு ஒப்பந்தத்தை நுகர்வோர் விதி 33(3)ன் படியோ அல்லது உரிமம்தாரர் விதி 33(4)ன் படியோ முறிக்கும் பொழுது உரிமம்தாரருக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையை நுகர்வோரின் கணக்கில் உள்ள காப்புத் தொகையில் சரி செய்து மீதம் உள்ள தொகையை நுகர்வோருக்கு 3 மாதகாலத்திற்குள் திரும்ப வழங்க வேண்டும் என்று தெரிகிறது.

10.10 மின் வழங்கல் விதித் தொகுப்பின் விதி 17(1)ன் படி, நுகர்வோர் உரிமம்தாரருக்கு மின்சாரம் கொடுக்க ஆரம்பித்த நாளிலிருந்து ஒப்பந்தம் முறிவு செய்யும் காலம் வரை காப்புத் தொகை மாதாந்திர சிறுமக் கட்டணம், நிரந்தர கட்டணம் ஏதேனும் இருந்தால் அவை மற்றும் Tariff ஆணையில் சொல்லப்பட்டுள்ள கட்டணங்கள் விதிகளில் கூறப்பட்டுள்ள கட்டணங்கள் மற்றும் ஆணையத்தின் வேறு ஆணைகளின்படி உள்ள கட்டணங்களையும் செலுத்த வேண்டும். எனினும், மீண்டும் மின் இணைப்பு பெறாத நுகர்வோர் இசைவு பத்திரம் முறிவு நாள் வரை மாதந்திர சிறுமக் கட்டணத்தை செலுத்த வேண்டும்.

10.11 மின்வழங்கல் விதித்தொகுப்பின் விதி 17(2) ன் படி நுகர்வோர் மின் துண்டிப்பு நாளில் உள்ள மின் கட்டண நிலுவைகளையும் பிறகட்டணங்களையும் மீட்டர் வாடகையையும் இசைவு பத்திர முறிவு நாள் வரை செலுத்த வேண்டும் மேலும் தாமத செலுத்த கூடுதல் சேவைகட்டணமும் (BPSC) சேர்த்து செலுத்த வேண்டும் என்று தெரிகிறது.

10.12 ஒரு மின் இணைப்பினை, நிரந்தரமாக துண்டிக்கும் பொழுது, அந்த மின் இணைப்பிற்கான மின்பாதையையும் அகற்ற வேண்டும். எனவே, அதற்கு ஆகும் செலவும் மின் கட்டணம் செலுத்தாமையால் நிரந்தர மின்துண்டிப்பு செய்யப்படும் நுகர்வோரிடம் பெறவேண்டும் என்பது ஏற்புடையது என்று நான் தீர்வு செய்கிறேன்.

11. <u>வழக்கெழுவினா இரண்டிற்கான தீர்வு</u>:

11.1 ஒரு மின் இணைப்பு மின்கட்டணம் செலுத்தாமையால் துண்டிக்கப்பட்டுள்ள இடத்தில் வேறு மின் இணைப்பு பெற வேண்டுமெனில் ஏற்கனவே உள்ள மின் இணைப்பின் நிலுவைத் தொகையை வசூல் செய்ய வேண்டுமா என்பதை பற்றி அறிய நான் மின் வழங்கல் விதித் தொகுப்பின் விதி 17(9)(a) ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி 17(9) (a) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"17. AGREEMENT WITH RESPECT TO SUPPLY: ISSUES ON RECOVERY OF CHARGES***

*xxx xx xxxx*

*xxx xxx xxx*

*9(a) In case of service connections in a premises, which have been disconnected / dismantled for defaults in payment of dues whatsoever and if such service connections are to be reconnected or new service connections are to be obtained by other persons in such premises either by purchase or transfer or lease basis, the Distribution Licensee shall reconnect such service connections or effect new service connections, as the case may be, in such premises only after payment of dues attributed to such premises by the applicant :*

*Provided that in cases such premises have legally been sub-divided, the outstanding dues attributed to such premises shall be divided in proportion to the area covered by that sub-division. A new service connection to any of such sub-divided premises shall be given only after the share of outstanding dues attributed to such sub-divided premises, is duly paid by the applicant. The Distribution Licensee shall not refuse connection to an applicant of such sub-*

*divided premises only on the ground that, dues attributed to the other portion(s) of such sub-divided premises have not been paid, nor shall the licensee demand record of last paid bills of such other portion(s) from such applicants.*
*xxx xxx xxx ”*

11.2 மேற்கண்ட விதியை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது ஒரு வளாகத்திலுள்ள மின் இணைப்பு எந்த வகையான நிலுவைத் தொகைகளையும் செலுத்த தவறினால் மின்இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளபோது அல்லது அகற்றப்பட்டுள்ள பொழுது (dismantled) அந்த வளாகத்தை விலைக்கு வாங்கியதால் அல்லது உரிமை மாற்றம் அல்லது குத்தகையின் அடிப்படையில் பிற நபர்களால் அந்த மின் இணைப்பிற்கு மறுமின் இணைப்பு அல்லது புதிய மின் இணைப்பு கோரப்பட்டால் அந்த இடத்திலுள்ள சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிலுவைகளை செலுத்தினால் மட்டுமே உரிமம்தாரர் அந்த வளாகத்திற்கு மறுமின் இணைப்பு அல்லது புதிய மின் இணைப்பை வழங்கமுடியும்.

11.3 என் முன்னால் உள்ள இந்த வழக்கில் ஏற்கனவே இருந்த விவசாய மின் இணைப்பு மின்கட்டணம் செலுத்தாமையால் மின்துண்டிப்பு செய்யப்பட்டு நிரந்தரமாக மின்இணைப்பு அகற்றப்பட்டுள்ளதால் அந்த கிணற்றில் மீண்டும் ஒரு விவசாய மின் இணைப்பு வழங்க ஏற்கனவே உள்ள நிலுவைத்தொகையினை செலுத்த வேண்டும் என்ற வாதம் மின்வழங்கல் விதித் தொகுப்பின் விதி 17(9)(a) ற்கு இணங்க உள்ளதால் எனக்கு ஏற்புடையதாக உள்ளது என்று தீர்வு செய்கிறேன்.

## 12. <u>வழக்கெழுவினா மூன்றிற்கான தீர்வு:</u>

12.1 மேல்முறையீட்டாளர் ரூ.50,000/– சுயநிதி திட்டத்தின் கீழ் அவருக்கு மதிப்பீட்டு தொகை செலுத்த அறிவிப்பு கொடுக்கப்பட்டு அவர் செலுத்த சென்ற பொழுது மதிப்பீட்டு தொகை பெறுவதற்கு மறுக்கப்பட்டது. எனவே, அவருக்கு அவருடைய சுயநிதி திட்டத்தின் பதிவு முன்னுரிமையில் விவசாய மின் இணைப்பை வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

12.2 அவர் மதிப்பீட்டு தொகை செலுத்த சென்ற பொழுது மறுக்கப்பட்டது என்பதற்கு ஆதாரமாக செயற் பொறியாளர் சிதம்பரம் அவர்களின் 5.6.2013 நாளிட்ட கடிதத்தை சுட்டிக் காட்டியுள்ளார்.

12.3 மேல்முறையீட்டாளர் மின்கட்டண நிலுவை மட்டும்தான் அவர் செலுத்த வேண்டும் என்று மன்றம் தீர்வு செய்துள்ளது. எனவே அவர் அந்த நிலுவைத் தொகை ரூ.1876/– ஐ 16.12.2015 ல் செலுத்தியுள்ளார். எனவே அவருக்கு மின் இணைப்பை அவர் சுயநிதி திட்டத்தின் கீழ் அவர் ரூ.500/– செலுத்தி 02.07.2011ல் பதிவு செய்துள்ள முன்னுரிமையின் அடிப்படையில் அவருக்கு மின்இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

12.4 மேலும் மின் இணைப்பை நிரந்தரமாக துண்டிப்பதற்கு ஆகும் செலவு தொகையை மின்நுகர்வோர் செலுத்த வேண்டும் என்பது வாரியத்தின் வழக்கத்தில் இல்லை என்றும் அவரிடம் எதிர்மனுதாரர் வேண்டும்

என்றே அந்த தொகை ரூ.38,145/— ஐ செலுத்த வேண்டும் என்று கோருகிறார். அது தவறு என்றும் வாதிட்டுள்ளார்.

12.5 எதிர்மனுதாரர் வாரிய விதிகளின் படி விவசாய மின் இணைப்பு மின்கட்டணம் செலுத்தாமையால் நிரந்தர மின்துண்டிப்பு செய்யப்பட்டு இசைவு பத்திரம் முடிக்கப்பட்டால் அந்த மின் இணைப்பை நிரந்தரமாக அகற்றுவதற்கான மதிப்பீட்டு தொகையையும் நிலுவைத் தொகையையும் நுகர்வோர்தான் செலுத்த வேண்டும் என்றும் மேல்முறையீட்டாளர் அந்த இருதொகைகளையும் செலுத்தாமல் சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு பெற செலுத்த வேண்டிய மதிப்பீட்டு தொகையை மட்டும் செலுத்துவதாக தெரிவித்ததால் அந்த தொகை பெறப்பட வில்லை என்று வாதிட்டுள்ளார்.

12.6 மேலும் ரூ.50,000/— சுயநிதி திட்டத்தின் கீழ் மதிப்பீட்டு தொகையாக ரூ.50,000/— செலுத்த வேண்டும் என்று 30 நாள் அறிவிப்பு 29.6.2012 அன்று வழங்கப்பட்டதாகவும் ஆனால் மேல்முறையீட்டாளர் பணம் செலுத்தவில்லை என்றும் கால அவகாசமும் கோரவில்லை என்றும் எனவே அவரின் மேற்கண்ட விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் சுயநிதி திட்டத்தின் முன்னுரிமையில் நீக்கப்பட்டு சாதாரண முன்னுரிமை வரிசையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

12.7 மேலும் மேல்முறையீட்டாளர் திரு.ராஜமோகன் அவர்கள் 16.12.2015 அன்று மீண்டும் ரூ.500/— செலுத்தி ரூ.50,000/— சுயநிதி திட்டத்தின் கீழ் மேற்கண்ட விண்ணப்பத்தை பதிவு செய்துள்ளார் என்ற வாதத்தையும் முன் வைத்துள்ளார்.

12.8 எதிர்மனுதாரர் Circular No. CFC/Gen/FC/DFC/AAO/Rev/D 202/08 dated 30.8.2008 என்ற சுற்றறிக்கையின்படி மின் இணைப்பை நிரந்தர துண்டிப்பு செய்யும் மதிப்பீடு மீண்டும் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் அதன்படி நுகர்வோர் கட்ட வேண்டிய தொகை ரூ.10,970/— என்றும் தெரிவித்துள்ளார்.

12.9 இந்த வழக்கிலுள்ள தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| (i) | விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் பதிவு | : 06/7.4.2011 |
| (ii) | சுயநிதி திட்டத்தின் கீழ் விண்ணப்ப பதிவு | : 02.07.2011 |
| (iii) | மதிப்பீட்டு தொகையை செலுத்தி தயார் நிலையை | |
| | (a) பதிவுசெய்ய அறிவிப்பு கொடுத்த நாள் | : 29.6.2012 |
| | (b) 30 நாள் அவகாசம் முடியும் நாள் | : 28.7.2012 |
| (iv) | மேற்கண்ட நிலஅளவை எண் 92/2 ல் ஏற்கனவே திருமதி. செல்லபாங்கி பெயரிலிருந்த மின் இணைப்பிற்கான நிலுவைத் தொகை ரூ.1876/— மற்றும் நிரந்தர மின்துண்டிப்பு மதிப்பீட்டு தொகை ரூ.38,145/— ஆக மொத்தம் ரூ.40021/— ஐ செலுத்த அறிவிப்பு கொடுத்த நாள் | : 30.6.2012 |
| (v) | நிலுவைத் தொகை ரூ.1876/— செலுத்தப்பட்ட நாள் | : 16.12.2015 |

12.10 இந்த வழக்கில் நிலுவைத் தொகை ரூ. 1876/– ஐ செலுத்த வேண்டும் என்பதில் இருதரப்பிற்கும் கருத்து வேற்றுமை இல்லை ஆனால் நிரந்தர மின் துண்டிப்பு செய்வதற்கு ஆன மதிப்பீட்டு தொகை ரூ.38145/– செலுத்த வேண்டியது இல்லை என்பது மேல்முறையீட்டாளரின் வாதம். வழக்கெழுவினா ஒன்றிற்கான தீர்வின்படி நிரந்தர மின்துண்டிப்பு செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகையும் நுகர்வோர்தான் செலுத்த வேண்டும் என்று தெரிகிறது.

12.11 வழக்கெழுவினா இரண்டிற்கான தீர்வின் படி மின் இணைப்பு கோரும் இடத்தில் ஏற்கனவே ஒரு மின் இணைப்பு இருந்து அதில் நிலுவைத் தொகை ஏதேனும் இருந்தால், அந்த நிலுவைத் தொகையையும் செலுத்திய பின்னர்தான் புதிய மின் இணைப்பு வழங்க முடியும் என்றும் தெரிகிறது.

12.11 இங்கு விவசாய மின் இணைப்பு எண்.376 மின்துண்டிப்பு செய்யப்பட்டு ரூ.1876/– மின் கட்டணம் நிலுவையிலுள்ளது. அந்த மின் இணைப்பு நிரந்தர துண்டிப்பு செய்யப்பட்டு அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.38145/– செலுத்த வேண்டும் என்றும் அறிவிப்பு 30.6.2012 அன்று கொடுக்கப்பட்டுள்ளது.

12.12 எனவே, மேல்முறையீட்டாளர், மேற்கண்ட நிலுவைத் தொகைகளை செலுத்தினால் தான் வேறு புதிய மின் இணைப்பை அந்த சர்வே எண்ணில் பெறமுடியும். ஆனால் மேல்முறையீட்டாளர் நிரந்தர மின்துண்டிப்பு செய்வதற்கான மதிப்பீட்டு தொகை தான் செலுத்த வேண்டியது இல்லை என்று நிலுவைத் தொகையை செலுத்தாமல் இருந்துள்ளதால் அவரின் சுயநிதி திட்டத்தின் கீழ் மதிப்பீட்டு தொகை பெறப்படவில்லை. அறிவிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் தொகை செலுத்தப்படாமையால் விண்ணப்பம் சாதாரண வரிசையில் வைக்கப்பட்டு விட்டது என்றும் தெரிகிறது.

12.13 மேல்முறையீட்டாளர் மின்இணைப்பை நிரந்தர மின் துண்டிப்பு செய்த மதிப்பீட்டு தொகையை செலுத்துவதில் அவருக்கு உடன்பாடு இல்லை எனில் உரிய முறைப்படி உரிமதாரர் மற்றும் சம்பந்தப்பட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு முறையீடு செய்து ஒரு தீர்வை பெற்று அதன்படி மின் இணைப்பை பெற நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை. நிரந்தர மின்துண்டிப்பிற்கான மதிப்பீட்டு தொகையையும் செலுத்தவில்லை.

12.14 மேல்முறையீட்டாளர், மதிப்பீட்டு தொகையை உரிய கால அவகாசத்தில் செலுத்தவில்லை என்பதால் அவரின் சுயநிதித்திட்டத்தின் முன்னுரிமையை இழந்துவிட்டார். எனவே அவர் அந்த முன்னுரிமையின் படி அவர் தற்பொழுது மதிப்பீடு தொகையை செலுத்தி மின் இணைப்பை கோருவது ஏற்புடையது அல்ல. மேலும், என்னுடைய வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வின்படி அவர் ஏற்கனவே இருந்த விவசாய மின் இணைப்பை நிரந்தர மின்துண்டிப்பு செய்ய ஆகும் மதிப்பீட்டு தொகையையும் செலுத்த வேண்டும் என்று தீர்வு செய்யப்பட்டுள்ளது. அந்த நிலையில் அவர் மதிப்பீடு கட்டணம் செலுத்தாமையால் இழந்த முன்னுரிமையின்படி அவருக்கு சுயநிதி திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்க வேண்டும் என்பது ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்கிறேன்.

**13. முடிவுரை:**

13.1 கோரிக்கை ஒன்று:

13.1.1 மேல்முறையீட்டாளர் 8/2000ல் துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு எண். 376 ஐ மறு மின் இணைப்பு தரும்படி கோரவில்லை என்று தெரிவித்துள்ளதால் மேற்கண்ட கோரிக்கைக்கு தீர்வு எதுவும் வழங்கப் படவில்லை.

13.2 கோரிக்கை இரண்டு:

13.2.1 வழக்கெழுவினா ஒன்றிற்கான தீர்வின்படி நிரந்தர மின் துண்டிப்பிற்கான மதிப்பீட்டு தொகையை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

13.2.2 செயற்பொறியாளர்/சிதம்பரம் (பொறுப்பு) அவர்கள் மின் இணைப்பு எண்.376 ஐ நிரந்தர மின் துண்டிப்பு செய்ய நுகர்வோர் செலுத்த வேண்டிய மதிப்பீட்டு தொகை ரூ.10,970/– என்று தெரிவித்துள்ளார். எனவே மேல்முறையீட்டாளர் மேற்கண்ட மதிப்பீட்டு தொகையை செலுத்த வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

13.3 கோரிக்கை மூன்று:

13.3.1 வழக்கெழுவினா மூன்றிற்கான தீர்வின்படி, மேல்முறையீட்டாளருக்கு அவர் 2.7.2011 ல் ரூ.500/– செலுத்தி சுயநிதி திட்டத்தின் கீழ் பதிவு செய்த விண்ணப்பம், அவர் மதிப்பீட்டு தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தாமையால் மீண்டும் சாதரண வரிசையில் வைக்கப்பட்டுள்ளதால் மேல்முறையீட்டளரின் கோரிக்கையான 2.7.2011 ல் சுயநிதி திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விண்ணப்ப முன்னுரிமையின்படி மின் இணைப்பு வழங்க வேண்டும் என்பது ஏற்புடையது அல்ல. எனவே, அவர் மீண்டும் ரூ.500/– செலுத்தி ரூ.50,000/– சுயநிதி திட்டத்தில் 16.12.2015 ல் பதிவு செய்துள்ளமையால் அந்த முன்னுரிமையின்படி தான் அவர் விவசாய மின் இணைப்பை பெறமுடியும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

13.4 மேற்கண்ட தீர்வுகளுடன் மேல்முறையீட்டு மனு எண்.106/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. ஜெ. ராஜமோகன்,
மேலவீடு, பாளையஞ்சேர்ந்தங்குடி,
ஓரத்தூர், சிதம்பரம் வட்டம்,
கடலூர் மாவட்டம்.

2) செயற் பொறியாளர்/சிதம்பரம்,
கடலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அனந்தீஸ்வரர் கோவில் தெரு,
சிதம்பரம்–608001.

3) உதவி செயற்பொறியாளர்/ஊரகம்/பண்ருட்டி,
கடலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பண்ருட்டி துணை மின் நிலைய வளாகம்,
பூங்குணம், பண்ருட்டி – 607 106.

4) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
கடலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கேப்பர் மலை, கடலூர்– 607 004.

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

6) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

7) உதவி இயக்குநர் (கணினி) – **<u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.